TNVP360002232026

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வானூர்
முன்னிலை:- திருமதி.N.பீரித்தி, B.A.,B.L.
குற்றவியல் நீதித்துறை நடுவர், வானூர்.
2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06-ம் நாள் வியாழக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 203/2026

அரசுக்காக.
காவல் ஆய்வாளர்,
கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு
குற்ற எண்.236/2025 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

| | |
|---|---|
| எதிரி | கோவிந்தராஜ் (46/2025) த/பெ.சந்திரன், நெ.111, கண்ணகி நகர், ஒக்கியம் துரைப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் |

...... எதிரி

## CASE SUMMARY

| S.No. | Particulars | Report |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | Accused Arrested and Released on Station Bail on_20-06-2025 |
| 2. | The date of filing of the complaint/final report in the Court | Date of filing final report on 09-04-2026 Taken Cognizance on 09-04-2026 |
| 3. | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4. | The date of 1st questioning of the | Accused questioned on 17-06-2026 |

| | | |
|---|---|---|
| | accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challange before superior courts: except routine petitions like petitions under section 317 of the Code: | Nil |
| 6. | Date of examination in – Chief and cross – Examination of a Witness | P.W.1 - Chief and Cross examined on 24-07-2026<br>P.W.2 - Chief and Cross examined on 27-07-2026<br>P.W.3 - Chief and Cross examined on 27-07-2026 |
| 7. | Date of examination of the accused U/Sec.351(1)(b) of the Code | 27-07-2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be ; and NBW pending/recalled | Nil |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கு 09/04/2026 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து குற்றம் முறையிடுவோர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் திரு.ராஜசேகர் நிலை 1 அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.காத்தவராயன் அவர்கள் முன்னிலையாகி இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்

20/06/2025ம் தேதி 17:00 மணிக்கு கோட்டக்குப்பம் சோதனை சாவடியில் மதுவிலக்கு வழக்கு சம்மந்தமாக வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் தமிழக அரசால் தடைச்செய்யப்பட்ட அந்நிய மாநில மதுபானங்களான 1) Mc Dowells Vsop Brandy 750ml- 1 No. 2) XXX Vsop Brandy 750ml – 3 Nos., 3) Majestic Brandy 90 ml – 5 Nos. ஆகியவற்றை மதுபானங்களை கடத்தி வந்ததாக எதிரி மீது கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் U/s.4(1)(C) TNP Amendment Act 2024-ன் கீழ் கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நகல்களும் BNSS 230 பிரிவின் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரியிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரி தான் குற்றவாளி அல்ல என்று குற்றத்தினை மறுத்தார். எனவே இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act 2024-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி

கூறி வினவியபோதும், எதிரி தான் குற்றவாளி அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம் தெரிவித்தார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>

20/06/2025ம் தேதி 17:00 மணிக்கு கோட்டக்குப்பம் சோதனை சாவடியில் மதுவிலக்கு விலக்கு வழக்கு சம்மந்தமாக தலைமை காவலர் திரு.மகேந்திரன் 521 மற்றும் தலைமை காவலர் திரு.உத்திரகுமார் 638 ஆகியோர் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது புதுச்சேரி டூ சென்னை மார்க்கம் வந்த தனியார் பேருந்தை நிறுத்தி வாகன தணிக்கை செய்தபோது ஒரு நபர் வைத்திருந்த உடைமைகளை சோதனை செய்தபோது அதில் 1) Mc Dowells Vsop Brandy 750ml- 1 No. 2) XXX Vsop Brandy 750ml – 3 Nos., 3) Majestic Brandy 90 ml – 5 Nos. ஆகிய பாட்டில்களை எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் வைத்திருந்த எதிரியை கைது செய்து எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை (மதுபான பாட்டில்களின் புகைப்படம் அ.சா.ஆ.2) கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 தயார் செய்தார். பின்னர் எதிரியை கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் தனிஅறிக்கையுடன் அ.சா.ஆ.3 நிலையம் வந்து காவல் ஆய்வாளர் திருமதி.அறிவழகி என்பவரிடம் ஒப்படைத்தார். காவல் ஆய்வாளர்

தனிஅறிக்கையை பெற்று எதிரி மீது நிலையக்குற்ற எண்.236/2025 பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act-ன் படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 பதிவு செய்தார். பின்னர் சாட்சிகள் தலைமை காவலர்கள் திரு.மகேந்திரன் மற்றும் திரு.உத்திரகுமார் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேற்படி மதுபானபாட்டில்களை படிவம் 91 அ.சா.ஆ.5 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தார். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act 2024-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

6) இவ்வழக்கில் திரு.மகேந்திரன், தலைமை காவலர் அ.சா.1 ஆகவும், திரு.உத்திரகுமார், தலைமை காவலர் அ.சா.2 ஆகவும், திருமதி.அறிவழகி காவல் ஆய்வாளர் அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

7) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து BNSS பிரிவு 351(1)(b)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோதும் எதிரி அரசு தரப்பு சாட்சிகள் கூறுவதை மறுத்து, தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்றும் கூறினார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8) இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

9) இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்யது யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதேயாகும்?

10) தலைமை காவலர் திரு.மகேந்திரன் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில்

“கடந்த 20.06.2025 அன்று நான் கோட்டக்குப்பம் மதுவிலக்கு சோதனை சாவடியில் தலைமை காவலராக பணியிலிருந்தேன். என்னுடன் த.லைமை காவலர் திரு.உத்திரகுமார் பணியில் இருந்தார். நாங்கள் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது பாண்டி டூ சென்னை மார்க்கமாக வந்த தனியார் பேருந்தை நிறுத்தி தணிக்கை செய்தபோது வழக்கின் ஆஜர் எதிரி கோவிந்தராஜ் வைத்ததிருந்த உடைமைகளை சோதனை செய்தபோது அதில் அந்நிய மாநில மதுபானங்கள் Mcdowells VSOP Brandy 750ml- 1no, XXX VSOP brandy 750ml- 3Nos, Majestic brandy 90ml- 5nos பாட்டில்கள் இருந்தது அவற்றை நான் தலைமை காவலர் திரு.உத்திரகுமார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். பின்பு நான் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட மேற்படி வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து ஆய்வாளர் அறிவழகியிடம் இது சம்மந்தமாக தனி அறிக்கை தாக்கல் செய்தேன். தனிஅறிக்கையின் படி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.236/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Actன் கீழ் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்" என்று சாட்சியமளித்துள்ளார்.

11) இவ்வழக்கில் கண்காணிப்பு பணியில் அ.சா.1 உடன் ஈடுபட்டதாக அரசு தரப்பில் சொல்லப்படும் திரு.உத்திரகுமார், தலைமை காவலர் அ.சா.2 ஆகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திருமதி.அறிவழகி அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார்.

12) அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் தாங்கள் சோதனை செய்ததாக சொல்லப்படும் சாலை அதிக மக்கள் நடமாட்டம் உள்ள சாலை என்றால் ஓரளவுக்கு மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றும், தனிநபர்கள் யார்

முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான் என்றும், படிவம் 91ல் தன் கையொப்பம் இல்லை என்றால் சரிதான் என்றும், பேருந்தில் பயணித்த பயணிகளை ஆய்வாளர் சாட்சியாக விசாரித்தாரா என்றால் இல்லை என்று சாட்சியமளித்துள்ளார்கள்.

13) அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது குறுக்கு விசாரணையில் அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளதிலிருந்து புலன் விசாரணை அதிகாரி எதிரியிடமிருந்து மதுபானங்களை கைப்பற்றினரா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியதாக அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் சாட்சியமளித்துள்ளபோதிலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் காவல் துறையை சேர்ந்தவர்கள் ஆவர். இந்நிலையில் கைப்பற்றுதல் மகசர் மற்றும் படிவம் 91ல் தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யாமலும், பேருந்தில் பயணித்த பயணிகளில் யாரையும் விசாரிக்காதது புலனாய்வு அதிகாரி மேற்கொண்ட புலனாய்வில் நம்பகத்தன்மையில் சந்தேகமே ஏற்படுகிறது. மேற்கொண்ட புலனாய்வில் நம்பகத்தன்மையில் சந்தேமே ஏற்படுகிறது.

14) இவ்வாறான சூழ்நிலையில் எதிரி மதுபான பாட்டில்கள் கடத்தி சென்றாரா என்பதிலும் ஐயம் நிலவுகிறது. எனவே புலனாய்வு அதிகாரி அவருக்கு புள்ளியியல் தேவைப்படுவதால் தவறான வழக்கை ஜோடித்துள்ளாரோ என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகின்றது. மேலும் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் எதிரியிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டது என்பதை உறுதியூட்டும் விதத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்காதது இவ்வழக்கில் நம்பகதன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து

எதிரி மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலைகளில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி எதிரியை இந்த வழக்கின் குற்றவாளி அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) எனவே எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>முடிவாக</u>

16) மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act-ன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, எதிரியை மேற்சொன்ன பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.450/2025-ல் உள்ள 1) Mcdowells VSOP Brandy 750ml- 1no, 2) XXX VSOP brandy 750ml- 3Nos, 3) Majestic brandy 90ml- 5nos இருந்தது. மேற்படி மதுபான பாட்டில்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற W.P.No.6126/2020, 01-06-2020ன் வழிகாட்டுதல்களின் படி அழிக்கப்பட்டுள்ளது.

18) எதிரி ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில், மேல்முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு

செய்யவில்லை எனில் மேல் முறையிட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

N PREETHI Digitally signed by N PREETHI Date: 2026.08.10 14:07:34 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.

<u>பின் இணைப்பு -</u>
<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.மகேந்திரன், தலைமை காவலர் |
| அ.சா.2 | திரு.உத்திரகுமார், தலைமை காவலர் |
| அ.சா.3 | திருமதி.அறிவழகி, காவல் ஆய்வாளர் |

<u>அரசுத்தரப்பு சான்றாவணம்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 20/06/2025 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.2 | 20/06/2025 | மதுபான பாட்டில்களின் புகைப்படம் |
| அ.சா.ஆ.3 | 20/06/2025 | தனியறிக்கை |
| அ.சா.ஆ.4 | 20/06/2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 23/10/2025 | படிவம் 91 |

<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u> - இல்லை.

<u>எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள்</u> - இல்லை.

N PREETHI Digitally signed by N PREETHI Date: 2026.08.10 14:07:41 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.